**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.90** **நாள்: 11.07.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சி அம்பத்தூர் மண்டலத்திற்குட்பட்ட 3 குளங்களை புனரமைக்க உதவிய மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களுக்கு பகுதி மக்கள் மற்றும் தன்னார்வலர்கள் பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்தனர்.**

= = = = =

சென்னையின் நிலத்தடி நீரை உயர்த்தவும், வெள்ளத்தின் போது ஏற்படும் பேராபத்தை தடுத்து வீணாகும் தண்ணீரை முறையாக சேமிக்கும் வண்ணம் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதில் முக்கியமாக பெருநகர சென்னை மாநகராட்சி தனது கட்டுப்பாட்டில் உள்ள 210 நீர்நிலைகளை தூர்வாரி சீரமைக்கும் பணியில் போர்க்கால அடிப்படையில் ஈடுபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. பெருநகர சென்னை மாநகராட்சியின் பல நீர்நிலைகளில் சீரமைக்கும் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளது. இப்பணியினை சென்னை Smart City மூலமாகவும், தனியார் நிறுவனங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களோடு இணைந்தும் மழைநீர் வடிகால் துறை புனரமைத்து வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, தங்களது பகுதிகளில் உள்ள நீர்நிலைகளில் தன்னார்வத்துடன் முன்வந்து புனரமைக்க விரும்புவோர் சென்னை மாநகராட்சியை அணுகினால் அவர்களுக்கு அனைத்து உதவிகளையும் அரசு செய்யும் என மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி அம்பத்தூர் மண்டலத்தில் உள்ள சிவா விஷ்ணு குளம், கங்கையம்மன் குளம் மற்றும் பட்டரவாக்கம் பெரிய குளம், பள்ளிக்கரணை பகுதியில் பிள்ளையார் கோயில் குளம் ஆகிய 4 குளங்களை புனரமைத்து சீர்செய்ய உதவுமாறு நீர்நிலைகள் பாதுகாப்பு இயக்கம், தன்னார்வலர்கள், பொதுமக்கள் மற்றும் குடியிருப்போர் நலச்சங்கங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொண்டனர். அத்தகைய தன்னார்வலர்களை ஊக்குவிக்கும் வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அம்பத்தூர் மண்டலத்தில் உள்ள குளங்களை புனரமைக்க தேவையான 3 பொக்லைன் இயந்திரங்கள், 1 ஜே.சி.பி. இயந்திரம் மற்றும் 4 லாரிகளை தன்னுடைய ஏற்பாட்டில் வழங்கி புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தினார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் துரித நடவடிக்கை மற்றும் ஏற்பாட்டினால் சிவா விஷ்ணு குளம் புனரமைக்கும் பணிகள் முடிவுற்று குளம் நல்லநிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. கங்கையம்மன் கோயில் குளத்தை புனரமைக்கும் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது. பட்டரவாக்கம் பெரியகுளத்தை புனரமைக்கும் பணிகள் இன்று துவங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் ஏற்பாட்டாலும், உள்ளாட்சி நிர்வாகம் மற்றும் தன்னார்வலர்களின் பங்களிப்புடன் மேற்கண்ட குளங்களில் மேற்கொள்ளப்பட்ட வரும் புனரமைக்கும் பணிகளை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் இன்று (11.07.2019) பார்வையிட்டு ஆய்வுசெய்து, புனரமைக்கப்பட்ட குளங்களை தொடர்ந்து நல்லநிலையில் பராமரிக்கவும், மீதமுள்ள குளங்களை புனரமைக்கும் பணிகளை விரைவாக முடிக்குமாறும் உத்தரவிட்டார்.

அம்பத்தூர் மண்டலத்திற்குட்பட்ட 3 குளங்களை புனரமைக்க துரித நடவடிக்கை மேற்கொண்டு உதவிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அப்பகுதி மக்கள் மற்றும் தன்னார்வலர்கள் பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்தனர்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் அம்பத்தூர் மண்டலத்திற்குட்பட்ட குளங்களை புனரமைக்கும் பணிகளை பார்வையிட்ட பின்னர் தெரிவித்ததாவது :

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டப்பேரவையில் தமிழகத்தில் உள்ள பல்வேறு நீர்நிலைகள் மற்றும் கோவில் குளங்களை புனரமைக்கவும், நீடித்த நிலையான நீர் பாதுகாப்பு திட்டத்தை 2015ல் அறிவித்தார்கள். பெருநகர சென்னை மாநகராட்சியில் 210 குளங்கள் மற்றும் ஏரிகள் உள்ளது. மூலதன நிதி மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.5.95 கோடி மதிப்பீட்டில் 5 குளங்களை சீரமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

சென்னை சீர்மிகு நகர நிதியின் கீழ் ரூ.16 கோடி மதிப்பீட்டில் வில்லிவாக்கம்–சிட்கோ நகர் பகுதியில் உள்ள 25.5 ஏக்கர் பரப்பளவுள்ள வில்லிவாக்கம் குளத்தை புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்தக் குளம் புனரமைக்கப்படுவதால் இது பிரதான நீர்நிலையாக திகழும். நிலத்தடி நீர்மட்டமும் அதிகரிக்கும். மேலும், சென்னை சீர்மிகு நகர நிதியின் கீழ் ரூ.18.20 கோடி மதிப்பீட்டில் 52 பணிகள் நடைபெற்று வருகிறது. சென்னை நதிகள்

புனரமைப்பு அறக்கட்டளை நிறுவனத்தால் ரூ.25.29 கோடி மதிப்பீட்டில் 2 குளங்களை புனரமைக்கும் பணிக்கு விரிவாக திட்ட அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி ஆதாரம் பெறப்பட்டவுடன் பணிகள் மேற்கொள்ளப்படும். தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் (TWIC) மூலம் ரூ.50.51 கோடி மதிப்பீட்டில் 57 குளங்களை புனரமைக்கும் பணிகளுக்கு விரிவாக திட்ட அளிக்கை பெறப்பட உள்ளது.

கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதியில் உள்ள 55 குளங்களை புனரமைக்கும் பணிக்கு ரூ.45.66 கோடி மதிப்பீட்டில் விரிவாக திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. சமூக பொறுப்பு நிதியின் கீழ் 38 நீர்நிலை சீரமைக்கும் பணிகளுக்காக விரிவான திட்ட அறிக்கை தயாரித்து வருகிறது. இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால் இதன்மூலம் பெருநகர சென்னை மாநகராட்சியை சுற்றியுள்ள பகுதிகளில் 1 டி.எம்.சி. அளவு கூடுதலாக மழைநீரை தேக்கி வைக்க முடிவதோடு நிலத்தடி நீர்மட்டமும் உயர வழிவகுக்கும்.

அரசு இதுபோன்று பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டாலும், ஒவ்வொரு தனி மனிதனின் பங்களிப்பும் இருந்தால் மழைநீரை சேகரித்து நிலத்தடி நீர் மட்டத்தினை உயர்த்த ஏதுவாக இருக்கும். அனைத்து இடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், பெருநகர சென்னை மாநகராட்சியில், மழைநீர் கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்களை ஆய்வு செய்யவும், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்கப்படாத கட்டிடங்களில் புதிய கட்டமைப்புகளை ஏற்படுத்தவும், சென்னை மாநகரின் வார்டு உதவி பொறியாளர், குடிநீர் உதவி பொறியாளர், வரி வசூலிப்பவர், குடிநீர் பணிமனை மேலாளர், சுகாதார ஆய்வாளர் ஆகிய 5 நபர்களை கொண்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலர் தலைமையிலும், சென்னை குடிநீர் வாரியத்தின் வட்டார பொறியாளர் தலைமையிலும், வார்டு வாரியாக ஒரு குழு வீதம் 200 குழுக்கள் அமைக்கப்பட்டு, இக்குழுக்கள் தொடர்ந்து மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றன.

முதற்கட்டமாக, இக்குழு, வருகின்ற 31.08.2019க்குள் தங்களது வார்டுகளில் உள்ள கட்டிடங்களை ஆய்வு செய்து, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தாத 1000 கட்டடங்களை கண்டறிந்து, அங்கு மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்திட உரிமையாளருக்கு ஆலோசனைகளையும், விழிப்புணர்வும் வழங்கும். இதன் மூலம் மொத்தமாக, பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியின் அனைத்து 200 வார்டுகளிலும் சேர்த்து சுமார் 2 லட்சம் வீடுகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை ஏற்படுத்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, மாநகரப் பகுதிகளிலுள்ள வீடுகளில் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளில் சிறு, சிறு பழுதுகளால் பயன்பாடற்று இருந்தால் அவற்றை சரிசெய்ய இக்குழு பொதுமக்களுக்கு ஆலோசனைகள் வழங்க வேண்டும். எனவே, பொதுமக்கள் நிலத்தடி நீர்மட்டத்தினை அதிகரிக்கவும், எதிர்கால தண்ணீர் தேவையை பூர்த்தி செய்யவும், தங்கள் இல்லங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை அமைத்து அரசின் இம்முயற்சிக்கு தங்களின் முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

**மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள்**

மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிகளில், மொத்தமுள்ள 45.14 லட்சம் கட்டடங்களில், 39.40 லட்சம் கட்டடங்களில் (30,331 அரசு கட்டடங்கள் மற்றும் 39.10 லட்சம் தனியார் கட்டடங்கள்) மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. கோவில் குளங்கள் உட்பட மொத்தமுள்ள 1,486 குளங்களில், 773 குளங்களுக்கு மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. இராமநாதபுரம், காரைக்குடி, புதுக்கோட்டை, பெரம்பலூர் நகராட்சிகள் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சியில் உள்ள 5 நீர் நிலைகள், உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் நிதி (IGFF)யில் ரூ.6.14 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் (TNSUDP) மூலம் ரூ.14.98 கோடி மதிப்பீட்டில் பல்லாவரம் பெரிய ஏரி, கீழ்கட்டளை ஏரி புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. ஈரோடு மாநகராட்சி மற்றும் அரியலூர், நாகப்பட்டினம், பட்டுக்கோட்டை, புதுக்கோட்டை, காரைக்குடி மற்றும் சாத்தூர் ஆகிய 6 நகராட்சிகளில் நீர் ஆதாரங்களை மேம்படுத்துவதற்காக ஜெர்மன் மேம்பாட்டு வங்கி நிதி (KfW) திட்டத்தின் கீழ் ரூ.38.24 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, தற்போது பணிகள் அனைத்தும் முன்னேற்றத்தில் உள்ளன.

சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் ரூ.308 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் 8 நீர் நிலைகளில் புனரமைப்பு பணிகள் எடுக்கப்பட்டு, அதில் 3 பணிகள் முன்னேற்றத்திலும், மீதமுள்ள குளங்கள் ஒப்பந்தப்புள்ளி நிலையிலும் உள்ளன. தஞ்சாவூர் மாநகராட்சியில் ரூ. 10.25 கோடி மதிப்பீட்டில் 2 நீர்நிலைகளில் புனரமைப்பு பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

**பேரூராட்சிகள் இயக்ககம்**

பேரூராட்சிகளால், 1,916 நீர்நிலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், கடந்த 5 ஆண்டுகளில், பொது நிதி, நபார்டு வங்கி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.80.83 கோடி மதிப்பீட்டில் 825 நீர் நிலைகள்

புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2016–17 முதல் 3 ஆண்டுகளில், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால், ரூ.5.42 கோடி மதிப்பீட்டில் 11 நீர்நிலைகளில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நடப்பாண்டிலும், ரூ.24.51 கோடி மதிப்பீட்டில் 50 நீர் நிலைகளை புனரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

**ஊரக வளர்ச்சித் துறை**

தமிழ்நாட்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 70,368 நீர் நிலைகளான சிறுபாசன ஏரிகள், குளங்கள் மற்றும் குட்டைகள் உள்ளன. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 2011 முதல் 2015 வரையிலான 5 ஆண்டுகளில் ரூ.2,200 கோடி மதிப்பீட்டில் 50,767 சிறுபாசன ஏரிகள், குளங்கள் மற்றும் குட்டைகள் தூர்வாரப்பட்டுள்ளன.

2016–17ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.461.86 கோடி மதிப்பீட்டில் 6,497 சிறுபாசன ஏரிகள், குளங்கள் மற்றும் குட்டைகள் தூர்வாரப்பட்டுள்ளன. 2016–17ஆம் ஆண்டில் தாய் II திட்டத்தின் கீழ் ரூ.226.13 கோடி மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் உள்ள 1,201 சிறுபாசன ஏரிகளில் உள்ள முட்புதர்களை அகற்றி, இயந்திரங்கள் மூலம் தூர்வாரி, கரைகளை பலப்படுத்தும் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. 2017–18ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.414.95 கோடி மதிப்பீட்டில் 10,011 சிறுபாசன ஏரிகள், குளங்கள் மற்றும் குட்டைகள் தூர்வாரப்பட்டுள்ளன என மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., அவர்கள், மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.பி.என்.ஸ்ரீதர், இ.ஆ.ப., அவர்கள், அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.அலெக்ஸாண்டர் அவர்கள், முதன்மை தலைமைப் பொறியாளர் திரு.எம்.புகழேந்தி அவர்கள், தலைமைப் பொறியாளர் திரு.எல்.நந்தகுமார் அவர்கள், மண்டல அலுவலர் மற்றும் செயற்பொறியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**